## இன்னலுக்குள்ளான நபர்களுக்கான இழப்பீடுகளை வழங்குதல்

1. இன்னலுக்குள்ளான நபர்கள் அதாவது. கீழே உள்ள பத்தி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகள் மற்றும் சம்பவங்களின் விளைவாக இழப்பு அல்லது சேதத்தை எதிர்நோக்கிய நபர்கள், கீழே உள்ள அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள இழப்பீட்டுத் திட்டங்களின் அடிப்படையில் இழப்பீடுகளைக் கோருவதற்கு ஏற்புடையவர்கள்.

2. நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் பின்வருமாறு-
   அ. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய இன மோதலகள் (1983 முதல்)
   ஆ. வடக்கு மற்றும் கிழக்கிற்கு வெளியே நிகழ்ந்த இனவாத வன்முறைகள் தொடர்பான பின்வரும் சம்பவங்கள் - பேருவளையில் இடம்பெற்ற உள்நாட்டு அமைதியின்மை (ஜனவரி 2006)
      i. வெலிக்கடை சிறைச்சாலைக்குள் நிகழ்ந்த கலவரம் (நவம்பர் 2012)
      ii. பேருவளை மற்றும் அளுத்கமவில் நிகழ்ந்த உள்நாட்டு அமைதியின்மை (ஜூன் 2014)
      iii. ஜிந்தோட்டையில் இடம்பெற்ற சமூக அமைதியின்மை (நவம்பர், 2017)
      iv. அம்பாறையில் இடம்பெற்ற உள்நாட்டுக் கலவரம் (பிப்ரவரி, 2018)
      v. கண்டி மாவட்டத்தில நிகழ்ந்த உள்நாட்டு அமைதியின்மை (மார்ச் 2018)
      vi. ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்றைய குண்டுவெடிப்புச் சம்பவம் (ஏப்ரல் 2019)
      vii. ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்றைய குண்டுவெடிப்பின் பின்னரான விளைவுகள் (மே 2019)

3. இழப்பீடுகள் இவற்றின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன –
   அ. இன்னலுக்குள்ளான நபரின் குடும்ப உறுப்பினரின் உயிர் இழப்பு
   ஆ. இன்னலுக்குள்ளான நபருக்கு ஏற்பட்ட காயங்கள்
   இ. பாதிக்கப்பட்ட நபருக்கு சொந்தமான தனியார் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதம்
   ஈ. மத வழிபாட்டுத் தலங்களுக்கு ஏற்பட்ட சேதம்.

4. இழப்பீடு கோருவதற்கு ஏற்புடைய நபர்களால், ஆதாரமாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் வழங்கப்படக்கூடிய இழப்பீட்டின் அளவு, என்பன பின்வரும் வகைகளின் கீழ், அட்டவணை 1 இல் பகுதி 1 முதல் 11 வரை குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது:

**<u>இன முரண்பாடு</u> :**

அ. இன முரண்பாட்டின் காரணமாக ஏற்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருரின் இறப்பு – பார்க்க பகுதி 1
ஆ. இன முரண்பாட்டின் காரணமாகப் பொது மக்களில் ஒருவருக்கு ஏற்பட்ட இறப்பு– பார்க்க பகுதி 2.
இ. இன முரண்பாட்டின காரணமாக அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு ஏற்பட்ட காயம் – பார்க்க பகுதி 3
ஈ. இன முரண்பாட்டின் காரணமாகப் பொது மக்களில் ஒருவருக்கு ஏற்பட்ட காயம் – பார்க்க பகுதி 4
உ. இன முரண்பாட்டின் காரணமாக, அரச உத்தியோகத்தர் ஒருவருக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதம்– பார்க்க பகுதி 5
ஊ. இனமுரண்பாட்டின் காரணமாக, பொது மக்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதம்– பார்க்க பகுதி 6
எ. இனமுரண்பாட்டின் காரணமாக மத வழிபாட்டுத் தலங்களுக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதம் – பார்க்க பகுதி 7

**<u>வடக்கு மற்றும் கிழக்குக்கு வெளியே ஏற்பட்ட உள்நாட்டு அமைதியின்மை:</u>**

அ. உள்நாட்டுக் கலவரச் சம்பவங்களின் காரணமாகப் பொதுமக்களிற்கு ஏற்பட்ட இறப்பு – பார்க்க பகுதி 8
ஆ. உள்நாட்டுக் கலவரச் சம்பவங்களின் காரணமாகப் பொதுமக்களிற்கு ஏற்பட்ட காயம் – பார்க்க பகுதி 9
இ. உள்நாட்டுக் கலவரச் சம்பவங்களின் காரணமாகத் தனியார் சொத்துக்களுக்கு ஏற்ப்பட்ட இழப்பு அல்லது சேதம்– பார்க்க பகுதி 10
ஈ. உள்நாட்டுக் கலவரச் சம்பவங்களின் காரணமாகச் சமய வழிபாட்டுத் தலங்களுக்கு ஏற்ப்பட்ட இழப்பு அல்லது சேதம்– பார்க்க பகுதி 11

5. ஒவ்வொரு வகைப்பாட்டின் கீழும் இழப்பீடுகளைக் கோருவதற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களின் முழுப் பட்டியலானது கீழே அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. விண்ணப்பங்களைப் பெறுவதற்கும் செயலாக்குவதற்கும் பின்பற்றப்படும் செயல்முறை கீழே உள்ள அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 1**
**நட்டஈட்டுத் திட்டங்கள்**

**பகுதி 1**
**இன முரண்பாடு – அரச உத்தியோகத்தரின் இறப்பு**

| **நட்டஈட்டினைக் கோருவதற்குத் தகுதியுடைய நபர்/கள்** | **இறப்பினைச் சான்றுப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்** | **இழப்பீட்டுத் தொகை** |
|---|---|---|
| இறந்த அரச உத்தியோகத்தரில் தங்கியிருப்போர் | 1) மரணச் சான்றிதழ்<br>2) பிரேதப் பரிசோதனை அறிக்கை<br>3) அடுத்து வரும் உறவினர்களுடனான உறவினை நிரூபிப்பதற்கான ஆவணங்கள்:<br>a. திருமணப் பதிவுச் சான்றிதழ் (துணை): அல்லது<br>b. பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (பிள்ளைகள், உடன் பிறப்புகள், பெற்றோர்). | • நட்டஈடு- Rs. 200,000/=<br>• இறுதிச் சடங்குச் செலவுகளுக்காக – Rs. 10,000 |

**பகுதி 2**
**இன முரண்பாடு - பொது மக்களில் ஒருவருக்கு ஏற்பட்ட இறப்பு**

| **நட்டஈட்டினைக் கோருவதற்குத் தகுதியுடைய நபர்/கள்** | **இறப்பினைச் சான்றுப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்** | **இழப்பீட்டுத் தொகை** |
|---|---|---|
| இறந்த நபரில் தங்கியிருப்போர் | 1) மரணச் சான்றிதழ்<br>2) பிரேதப் பரிசோதனை அறிக்கை<br>3) அடுத்து வரும் உறவினர்களுடனான உறவினை நிஷேரூபிப்பதற்கான ஆவணங்கள்:<br>அ. திருமணப் பதிவுச் சான்றிதழ் (துணை): அல்லது<br>ஆ. பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (பிள்ளைகள்இ உடன் பிறப்புகள் பெற்றோர்). | • நட்டஈடு - Rs. 100,000/=<br>• இறுதிச் சடங்குச் செலவுகளுக்காக – Rs. 15,000/= |

**பகுதி 3**
**இன முரண்பாடு - அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு ஏற்பட்ட காயம்**

| **நட்டஈட்டினைக் கோருவதற்குத் தகுதியுடைய நபர்/கள்** | **காயத்தினைச் சான்றுப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்** | **இழப்பீட்டுத் தொகை** |
|---|---|---|
| காயமுற்ற அரச உத்தியோகத்தர் | காயத்தின் தன்மை மற்றும் காரணத்தை உறுதிப்படுத்தும் விதமாக அரச மருத்துவ அதிகாரியொருவரிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ்.<br><br>சான்றிதழானது, காயத்தின் விளைவாக வருமானம் ஈட்டும் திறனில் ஏற்படக்கூடிய இழப்பின் சதவீதத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கியிருக்க வேண்டும். | Rs. 100,000/= வரை |

## பகுதி 4

**இன முரண்பாடு - பொது மக்களில் ஒருவருக்கு ஏற்பட்ட காயம்**

| **நட்டஈட்டினைக் கோருவதற்குத் தகுதியுடைய நபர்/கள்** | **காயத்தினைச் சான்றுப்படுத்துவதற்காகச் சமற்பிக்க வேண்டிய ஆவணங்கள்** | **இழப்பீட்டுத் தொகை** |
|---|---|---|
| காயமுற்ற நபர் | காயத்தின் தன்மை மற்றும் காரணத்தை உறுதிப்படுத்தும் விதமாக அரச மருத்துவ அதிகாரியொருவரிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ்.<br><br>சான்றிதழானது, காயத்தின் விளைவாக வருமானம் ஈட்டும் திறனில் ஏற்படக்கூடிய இழப்பின் சதவீதத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கியிருக்க வேண்டும். | Rs. 50,000/= |

## பகுதி 5

**இன முரண்பாடு – அரச உத்தியோகத்தருக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதம்**

| **நட்டஈட்டினைக் கோருவதற்குத் தகுதியுடைய நபர்/கள்** | **சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு அல்லது சேதத்தினை சான்றுப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்** | **இழப்பீட்டுத் தொகை** |
|---|---|---|
| சொத்தக்களுக்கு உரிமையாளர்களான அரச மற்றும் நீதித்துறை உத்தியோகத்தர்கள் | *கட்டடங்களுக்கு :*<br>பின்வரும் அறிக்கைகளுடனான பிரதேச செயலாளரின் சான்றிதழ் –<br>அ. மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை; அல்லது<br>ஆ. அப் பிரதேசத்துக்குரிய மாவட்டப் பொறியியலாளர் (கட்டடம்);அல்லது<br>இ. சேதத்தின் தன்மை மற்றும் மதிப்பு தொடர்பில், அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டாளின் அறிக்கை.<br>*மோட்டார் வாகனங்களுக்காக :*<br>சேதம் ஏற்பட்ட வேளையில் வாகனத்தின் பெறுமதி எவ்வளவு என்பதனைக் குறிப்பிடும் விதமாக அங்கீகரிக்கப்பட்ட வாகனத் திருத்துமிட உரிமையாளரிடமிருந்து பெறப்படும் சான்றிதழ். | Rs. 150,000/= வரை |

## பகுதி 6

## இன முரண்பாடு – பொது மக்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதம்

| நட்டஈட்டினைக் கோருவதற்குத் தகுதியுடைய நபர்/கள் | சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு அல்லது சேதத்தினை சான்றுப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் | இழப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| சொத்தின் உரிமையாளர் | *கட்டடங்களுக்கு :*<br>பின்வரும் அறிக்கைகளுடனான பிரதேச செயலாளரின் சான்றிதழ்<br>அ. மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அல்லது<br>ஆ. அப் பிரதேசத்துக்குரிய மாவட்டப் பொறியியலாளர் (கட்டடம்) அல்லது<br>இ. சேதத்தின் தன்மை மற்றும் மதிப்பு தொடர்பில், அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டாளின் அறிக்கை.<br>*மோட்டார் வாகனங்களுக்காக :*<br>சேதம் ஏற்பட்ட வேளையில் வாகனத்தின் பெறுமதி எவ்வளவு என்பதனைக் குறிப்பிடும் விதமாக அங்கீகரிக்கப்பட்ட வாகனத் திருத்துமிட உரிமையாளரிடமிருந்து பெறப்படும் சான்றிதழ்.<br>*மீன்பிடி உபகரணங்களுக்கு::*<br>இழப்பு/சேதம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் இழந்த∴சேதமடைந்த பொருட்களின் பெறுமதி தொடர்பில் மாவட்ட மீன்வள விரிவாக்க உத்தியோகத்தரிடமிருந்து பெறப்படும் சான்றிதழ். | சேதத்தின் 20% அதிகபட்சமாக ரூ.100,000 வரை |

## பகுதி 7

## இன முரண்பாடு – மத வழிபாட்டுத் தலங்களுக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதம்

| நட்டஈட்டினைக் கோருவதற்கான தகுதிகள் | இழப்பு அல்லது சேதத்தினை சான்றுப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் | இழப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| அரசு அல்லது ஏனைய மத சார்பான நிறுவனங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட மத வழிபாட்டுத் தலங்கள் | காவற் துறையில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரதி ; அல்லது<br>பயங்கரவாத நடவடிக்கைகளால் குறித்த மதத் தலம் அழிக்கப்பட்டது/சேதமடைந்தது எனக் காவற் துறையிடம் இருந்து பெறப்பட்ட அறிக்கை. | **அழிவிற்காக** - Rs. 1,000,000- (அதிகபட்சமாக)<br>**சேதத்திற்காக –** அதிகபட்சமாக ரூபா. 500,000/-25%, 40%, 20% மற்றும் 15% ஆகிய தவணை முறையில் செலுத்தப்படும். |

## பகுதி 8

## வடக்கு மற்றும் கிழக்கிற்கு வெளியே இடம்பெற்ற உள்நாட்டு அமைதியின்மை - மரணம்

| சம்பவம் | நட்டஈட்டினைக் கோருவதற்கான தகுதிகள் | இறப்பினைச் சான்றுப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் | இழப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| வெலிக்கடைச் சிறைச்சாலை, 2012 | இறந்தவரில் தங்கி வாழ்பவர்கள் | 1) மரணச் சான்றிதழ்<br>2) பிரேதப் பரிசோதனை அறிக்கை<br>3) அடுத்து வரும் உறவினர்களுடனான உறவினை நிரூபிப்பதற்கான ஆவணங்கள்:<br>• திருமணப் பதிவுச் சான்றிதழ் (துணை); அல்லது<br>• பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (பிள்ளைகள், உடன் பிறப்புகள்,பெற்றோர்). | ரூபா. 2,000,000/= |
| பேருவளை,அழுத்கம, 2014 | | | ரூபா. 2,000,000/= |
| கிந்தோட்டை, 2017, அம்பாறை, 2018 | | | ரூபா. 500,000/= |
| கண்டி மாவட்டம், 2018 | | | ரூபா. 500,000/= |
| உயிர்த்த ஞாயிறு, 2019 | | | ரூபா. 1,000,000/= |
| உயிர்த்த ஞாயிற்றுக்குப் பின்னர், 2019 | | | ரூபா. 1,000,000/= |

## பகுதி 9

## வடக்கு மற்றும் கிழக்கிற்கு வெளியே இடம்பெற்ற உள்நாட்டு அமைதியின்மை – காயம்

| சம்பவம் | நட்டஈட்டினைக் கோருவதற்கான தகுதிகள் | காயத்தினைச் சான்றுப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் | இழப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| வெலிக்கடைச் சிறைச்சாலை, 2012 | காயமுற்ற நபர் | காயத்தின் தன்மை மற்றும் காரணத்தை உறுதிப்படுத்தும் விதமாக அரச மருத்துவ அதிகாரியொருவரிடமிருந்து பெறப்பட்ட மருத்துவச் சான்றிதழ். | ரூபா. 500,000/= |
| பேருவளை,அழுத்கம, 2014 | | | ரூபா. 500 ,000/= |
| கிந்தோட்டை, 2017, அம்பாறை, 2018 | | | ரூபா. 250,000/= |
| கண்டி மாவட்டம், 2018 | | | ரூபா. 250,000/= |
| உயிர்த்த ஞாயிறு, 2019 | | | ரூபா. 500,000/= |
| உயிர்த்த ஞாயிற்றுக்குப் பின்னர், 2019 | | | ரூபா. 500,000/= |

## பகுதி 10

## வடக்கு மற்றும் கிழக்கிற்கு வெளியே இடம்பெற்ற உள்நாட்டு அமைதியின்மை – சொத்து இழப்பு அல்லது சேதம்

| சம்பவம் | நட்டஈட்டினைக் கோருவதற்கான தகுதிகள் | இழப்பு அல்லது சேதத்தினை சான்றுப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் | இழப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| பேருவளை, 2006 | சொத்தின் உரிமையாளர் | 1. காவற் துறையில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரதி,<br>அல்லது<br>உள்நாட்டு அமைதியின்மை காரணமாகக் குறித்த சொத்து அழிக்கப்பட்டது/சேதமடைந்தது எனக் காவற் துறையிடம் இருந்து பெறப்பட்ட அறிக்கை.<br>2. சேதத்திற்கான காரணம், தன்மை மற்றும் பெறுமதி என்பவற்றினைக் குறிப்பிடும் மதிப்பீட்டு அறிக்கை | இருப்பிலுள்ள பொருட்களுக்கு ஏற்பட்ட சேதம் - Rs. 500,000/= . சொத்துச் சேதம்- தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் மதிப்பீட்டின் அடிப்படையில்.. |
| பேருவளை,அழுத்கம, 2014 | | | களுத்துறை மாவட்டச் செயலாளரின் குழுவின் பரிந்துரையின்படி |
| கிந்தோட்டை, 2017, அம்பாறை, 2018 | | | ரூபா. 100,000/-. வரை<br>*ரூபா. 500,000/- இற்கு மேற்பட்ட சொத்தழிவு நட்டஈட்டுக் கோரிக்கைகள் கண்டி மாவட்டச் செயலாளரினால் நியமிக்கப்படும் குழுவின் பரிந்துரையின் பெயரிலேயே வழங்கப்படும்.* |
| கண்டி மாவட்டம், 2018 | | | ரூபா. 100,000/-. வரை<br>*ரூபா. 500,000/- இற்கு மேற்பட்ட சொத்தழிவு நட்டஈட்டுக் கோரிக்கைகள் கண்டி மாவட்டச் செயலாளரினால் நியமிக்கப்படும் குழுவின் பரிந்துரையின் பெயரிலேயே வழங்கப்படும்.* |
| உயிர்த்த ஞாயிறு, 2019 | | | ரூபா. 5,000,000/= |
| உயிர்த்த ஞாயிற்றுக்குப் பின்னர், 2019 | | | Rs. 5,000,000/= |

## பகுதி 11

## வடக்கு மற்றும் கிழக்கிற்கு வெளியே இடம்பெற்ற உள்நாட்டு அமைதியின்மை – மத வழிபாட்டுத் தலங்களுக்கு ஏற்பட்ட சேதம்

| சம்பவம் | நட்டஈட்டினைக் கோருவதற்கான தகுதிகள் | இழப்பு அல்லது சேதத்தினை சான்றுப்படுத்துவதற்காகச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் | இழப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| கிந்தோட்டை, 2017, அம்பாறை, 2018<br><br>கண்டி மாவட்டம், 2018 | வழிபாட்டுத் தலத்தின் அறங்காவலர்கள் | 1. காவற் துறையில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரதி<br>அல்லது<br>உள்நாட்டு அமைதியின்மை காரணமாகக் குறித்த சொத்து அழிக்கப்பட்டது சேதமடைந்தது எனக் காவற் துறையிடமிருந்து பெறப்பட்ட அறிக்கை.<br><br>2. சேதத்திற்கான காரணம், தன்மை மற்றும் பெறுமதி என்பவற்றினைக் குறிப்பிடும் மதிப்பீட்டு அறிக்கை | முற்றாகச் சேதமடைந்திருப்பின் - ரூபா.1,000,000/ பகுதியளவில்<br><br>சேதமடைந்திருப்பின் – Rs. 500,000/= |

## அட்டவணை 2
## இழப்பீட்டுக்கான கோரிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

1. **இறப்பு தொடர்பான கோரிக்கைகள்:**
   i. சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம்
   ii. சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் முறைப்பாட்டின் மூலப் பிரதி.
   iii. சமாதான நீதவான் அல்லது கிராம உத்தியோகத்தரால் ”உண்மைப் பிரதி” என உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நகல்.
   iv. மரணப் பதிவுச் சான்றிதழின் பிரதி
   v. நீதித்துறை மருத்துவ அதிகாரி அல்லது திடீர் மரணங்கள் பற்றிய விசாரணையாளரின் அறிக்கை
   vi. வாரிசுகள் தொடர்பான சான்று (உ.ம் மனைவியின் திருமணப் பதிவுச் சான்றிதழ், குழந்தைகளின் பிறப்புப் பதிவுச் சான்றிதழ்)
   vii. வங்கிக் கணக்கின் விபரங்கள் (கணக்கு வைத்திருப்பவரின் பெயர், வங்கி மற்றும் கிளை, கணக்கு இல)
   viii. பொது 35 வவுச்சரில் ரூபா.25/= முத்திரையிடப்பட்டு, சமாதான நீதவான் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டிருத்தல்.

2. **காயம் தொடர்பான கோரிக்கைகள்:**
   i. சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம்
   ii. சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் முறைப்பாட்டின் மூலப் பிரதி.
   iii. சமாதான நீதவான் அல்லது கிராம உத்தியோகத்தரால் ”உண்மைப் பிரதி” என உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நகல்.
   iv. காயங்கள் குறித்து அரச மருத்துவ அதிகாரியின் மருத்துவ அறிக்கை.
   v. வங்கிக் கணக்கின் விபரங்கள் (கணக்கு வைத்திருப்பவரின் பெயர், வங்கி மற்றும் கிளை, கணக்கு இல)
   vi. பொது 35 வவுச்சரில் ரூபா.25/= முத்திரையிடப்பட்டு, சமாதான நீதவான் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டிருத்தல்.

3. **சொத்து இழப்பு அல்லது சேதம் தொடர்பான கோரிக்கைகள்**
   i. சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம்
   ii. சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் முறைப்பாட்டின் மூலப் பிரதி
   iii. சமாதான நீதவான் அல்லது கிராம உத்தியோகத்தரால் ”உண்மைப் பிரதி” என உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நகல்.
   iv. உடைமை உறுதிப் பத்திரத்தின் பிரதி.
   v. சம்பவத்தின் போதான உரிமையாளரின் பெயரை உறுதிப்படுத்துகின்ற காணிப் பதிவேட்டில் உள்ள இணைப்பக்கத்தின் (folio) பிரதியானது பிரதேச செயலாளரால் சான்றுறுதிப்படுத்தப்படுதல்.
   vi. தேசிய வீடமைப்பு அதிகாரசபை, பொறியாளர் அல்லது மதிப்பீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட

சேத மதிப்பீடு.

vii. வங்கிக் கணக்கின் விபரங்கள் (கணக்கு வைத்திருப்பவரின் பெயர், வங்கி மற்றும் கிளை, கணக்கு இல)

viii. பொது 35 வவுச்சரில் ரூபா.25/= முத்திரையிடப்பட்டு, சமாதான நீதவான் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டிருத்தல்.

ix. மோட்டார் வாகனங்களுக்கு சேதம் ஏற்படுமிடத்து - சேதம் ஏற்பட்ட காலப்பகுதியில் குறித்த வாகனத்தின் பெறுமதி தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட வாகனத் திருத்துமிட உரிமையாளரிடமிருந்து பெறப்படுகின்ற சான்றிதழ்.

x. மீன்பிடி உபகரணங்களுக்கு சேதம் ஏற்படுமிடத்து - இழப்பு/சேதம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் இழந்த/சேதமடைந்த பொருட்களின் பெறுமதி குறித்து மாவட்ட மீன்வள விரிவாக்க உத்தியோகத்தரிடமிருந்து பெறப்படும் சான்றிதழ்.

**4. <u>மத வழிபாட்டுத் தலங்களுக்கு ஏற்பட்ட இழப்பு அல்லது சேதம் தொடர்பான கோரிக்கைகள்</u>**

i. சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம்

ii. சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் முறைப்பாட்டின் மூலப் பிரதி

iii. வணக்கத் தலத்தினது அறங்காவலர்களின் பட்டியல்.

iv. தேசிய வீடமைப்பு அதிகாரசபை, பொறியாளர் அல்லது மதிப்பீட்டாளரிடமிருந்து பெறப்பட்ட சேத மதிப்பீடு.

v. வங்கிக் கணக்கின் விபரங்கள்

vi. பொது 35 வவுச்சரில் ரூபா.25/= முத்திரையிடப்பட்டு, சமாதான நீதவான் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டிருத்தல்.

## அட்டவணை 3
## இழப்பீடுகளுக்கான விண்ணப்பங்களைப் பெறுதல் மற்றும் செயலாக்குதலின் போது பின்பற்றப்படும் நடைமுறை.

**படிமுறை 1 : விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்தல்**

1. இழப்பீட்டுகளுக்கான விண்ணப்பங்கள் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
   இவ் விண்ணப்பப் படிவங்கள் பிரதேச செயலகங்களிலும் கிராம உத்தியோகத்தர்களிடமும் கிடைக்கப்பெறுவதுடன், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் www.reparations.gov.lk என்கின்ற இணையத்தளத்திலோ அல்லது பொது நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் இணையத்தளமான www.pubad.gov.lk. இலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.
   அரச உத்தியோகத்தர்கள் தாங்கள் இணைக்கப்பட்டுள்ள அலுவலகத்திலிருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
2. விண்ணப்பமானது பூர்த்தி செய்யப்பட்டு அனைத்து ஆதார ஆவணங்களுடனும் அப்பகுதியின் கிராம சேவையாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**படிமுறை 2 : கிராம உத்தியோகத்தரின் வகிபங்கு**

3. விண்ணப்பத்தில் உள்ள அறிக்கைகளில் உள்ள சில உண்மைகளை கிராம உத்தியோகத்தர் அவர் அறிந்தவை எனச் சான்றளிக்க வேண்டும், அவை தொடர்பில் திருப்தி அடையும் பட்சத்தில் அவர் அவ் உண்மைகளைச் சான்றுறுதிப்படுத்தி விண்ணப்பத்தினைச் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைப்பார்.

4. விண்ணப்பத்தினை ஏற்றுக்கொண்டமையினை உறுதிசெயயும் முகமாக கிராம உத்தியோகத்தர் விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலமான கையொப்பமிடப்பட்ட ஒப்புகை ஒன்றினை வழங்குவார்.

**படிமுறை 3 : பிரதேச செயலாளரின் வகிபங்கு**

5. அனைத்து ஆவணங்களும் ஒழுங்காக உள்ளனவா என்பதனை அறியும் முகமாக, பிரதேச செயலாளரின் அலுவலகம் விண்ணப்பம் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆதார ஆவணங்களை ஆகியவற்றினைச் சரிபார்க்கும்.

6. அனைத்து ஆவணங்களும் ஒழுங்காக இருக்குமிடத்து, விண்ணப்பம் மற்றும் ஆதார ஆவணங்கள் என்பன இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். முகப்புக் கடிதத்தின் பிரதியானது சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளருக்கும், விண்ணப்பதாரருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

   விண்ணப்பம் ஒழுங்காக இல்லாவிட்டால், அதாவது. விண்ணப்பத்தில் ஏதேனும் உள்ளீடுகள் முறையாகப் பூர்த்தி செய்யப்படாமலோ அல்லது ஏதேனும் ஆவணங்கள் இணைக்கப்படாமலோ இருந்தால், பிரதேச செயலகமானது-

- குறைபாடுகளை சரிசெய்ய விண்ணப்பதாரருக்கு ஆலோசனை வழங்குதல்; அல்லது
- விண்ணப்பதாரர் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் சந்தர்ப்பத்தில், இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கு விண்ணப்பத்தினை அனுப்பி வைத்தல்.

**7.** முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்மானது பிரதேச செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் விண்ணப்பதாரரும் கூட, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தில் அதனை ஒப்படைக்க முடியும்.

**படிமுறை 4 : இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் வகிபங்கு**

**8.** விண்ணப்பம் கிடைக்கப்பெற்றவுடன், இழப்பீடுகளுக்கான அலுவலகமானது விண்ணப்பதாரருக்கு ஒப்புகைக் கடிதத்மொன்றினை அனுப்பி வைப்பதுடன் விண்ணப்பத்தின் முன்னேற்றம் குறித்த விசாரணைகளுக்காகத் தொடர்பு கொள்ளக்கூடிய இழப்பீட்டுக்கான அலுவலகத்தில் பணியாற்றுகின்ற அர்ப்பணிப்புள்ள உத்தியோகத்தரொருவரின் தொலைபேசி இலக்கத்தினையும் விண்ணப்பதாரருக்கு வழங்கும்.

**9.** விண்ணப்பம் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு, அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய, இழப்பீடுகளுக்கான அலுவலகமானது விண்ணப்பத்தைச் செயல்படுத்தும்.

**10.** விண்ணப்பம் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டிராவிட்டாலோ அல்லது மேலும் ஏதேனும் ஆதார ஆவணங்கள் தேவைப்பட்டாலோ, இழப்பீடுகளுக்கான அலுவலகம் விண்ணப்பதாரருக்கு அவற்றைச் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தும். தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய திகதியும் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும்.

**11.** ஆவணங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் உதவி தேவைப்படுமிடத்து, இழப்பீடுகளுக்கான அலுவலக உத்தியோகத்தரினைத் தொடர்பு கொள்ளுதல் வேண்டும்.

**12.** விண்ணப்பம் ஒழுங்காக இருக்குமிடத்து, இழப்பீடுகளுக்கான அலுவலகமானது விண்ணப்பதாரருக்கான கொடுப்பனவினை விடுவிக்கும்